# தந்தி

இல: 1069 — 1970 ஜூன் 30 செவ்வாய்க்கிழமை ★ விலை சதம் 5


University of Jaffna Sri Lanka — Periodicals Division — Library

# கறுவாக்காட்டு கன்னிகளின் கள்ளக் கடத்தல் ஸ்தம்பிதம்

**இலங்கையில் இருந்து வெளி நாடு செல்லுபவர்கள் மீது நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவினுல் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டினுல் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் கறுவாக்காட்டுப் பெண்கள் என்று கூறப்படுகிறது.**

நிதி அமைச்சரின் இந்த நடவடிக்கையால் இரத்தினக் கல் வியாபாரம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

இலங்கையில் இருந்து வெளி நாடுகளுக்கு இரத்தினக் கற்களை கடத்திச் செல்வதற்கும், வெளி நாடுகளில் இருந்து வைரத்தையும், தங்கத்தையும் கொண்டு வருவதற்கும் அழகிய கறுவாக் காட்டுப் பெண்களே ஈடுபடுத்தப் பட்டு வருகிறார்கள்.

தமது அழகாலும், சாதுரியத்தாலும் சுங்கப் பகுதியினரின் கண்களில் மண்ணைத் தூவி கடத்தல் தொழிலை நடத்தி வரும் இந்த இளம் பெண்களுக்கு என்று புறம்பான இன்சூரன்ஸ் திட்டம் ஒன்று இயங்கி வருவதாக அறியப்படுகிறது.

தமது நகைகளுக்குள் இரத்தினக் கற்களை மறைத்து வைத்து இவர்கள் வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்வதாகவும், அதேபோல் வெளிநாட்டுத் தங்கத்தையும், வைரத்தையும் இங்கு கொண்டு வந்து சேர்ப்பதாகவும் கூறப்படுகிறது.

பெருபாலும் சென்னை அல்லது பம்பாய் செல்வதற்காக இப் பெண்கள் விமான டிக்கெட் பெறுவதாகவும், ஆனல் ஹாங்காங் செல்வதற்கான மற்றொரு விமானப் பிரயாணச் சீட்டும் இவர்களிடம் சேர்ப்பிக்கப்படுவதாகவும் தெரியவருகிறது. (5)

## திலக் குணரத்ன புதிய தூதுவர்

காமன்வெல்த் செயலகத்தின் உதவி டைரக்டர் ஜெனரல் திரு. திலக் குணரத்ன லண்டனில் புதிய இலங்கை தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

வெளிநாட்டு ராஜதந்திரச் சேவை சம்பந்தமாக அரசாங்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பதவி நியமனம் இது வாகும்.


செப்டெம்பர் முதலாம் திகதி இவர் தூதுவர் பதவியை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மீனாட்சி



என்னுங்க, இந்த நகைக் கடைக்காரர்கள் சிலர் கொள்ளை லாபம் அடிப்பது எப்படி?

ஆமாங்க, களவு போகுந் தந்திக் கம்பிகள் எங்கு போய்ச் சேர்கின்றன என்பதைக் கண்டு பிடித்தால் இது தெரியுமாம்!



பாரிசில் நடன அரங்கு ஒன்றில் இடம்பெற்ற பாலே நடனக் காட்சி ஒன்றை இங்கு காண்கிறீர்கள். கால்களை வில்லாக வளைத்து ஆடும் இந்த பாலே நடனத்துக்கு மேல் நாட்டில் பெரும் மௌசு உண்டு. (ம)

## செனட்டர் மீதான வழக்கில் சுந்தரலிங்கம் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜூன். 30

காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்ட திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தை நியமனப் பத்திரத்தில் எழுதி மோசடி செய்ததாக செனட்டர் எஸ். நடராசா மீது குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் திரு. டயஸ் முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

முன்னுள் வவுனியா எம். பி. யும் மனுதாருமான திரு. சி. சுந்தரலிங்கம் சாட்சியம் அளித்தபோது பின்வருமாறு கூறினார்.

"ஒவ்வொரு வேட்பாளருக்கும் 3 சோடி நியமனப் பத்திரங்கள் வழங்கப்படுவதுண்டு. நியமனப் பத்திரம் வழங்கப்பட்டபோது நான் ஆட்சேபனை தெரிவித்த பின்புதான் எதிரியினுல் அதில் கையெழுத்திடப்பட்டது. மற்றப் பத்திரங்கள் கையெழுத்திடப்படவில்லை."

செனட்டர் நடராஜா சார்பாக வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆஜரானுர். திரு. சுந்தரலிங்கம் தமது வழக்கைத் தாமே எடுத்துரைத்தார்.

குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் வாசித்துக் காட்டப்பட்டபோது திரளான மக்கள் உள்ளும் புறமும் நிறைந்திருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## 55 வயது வந்தவர்களுக்கு ஒருவருட கால அவகாசம்

வருகிற டிசம்பர் 31-ம் திகதிக்கு முன் 55 வயது பூர்த்தியடையும் அரசாங்க ஊழியர்களின் பதவிக் காலத்தை 3 மாதங்களுக்குப் பதில் 1 வருடமாக நீடிக்கவும் மந்திரி சபை தீர்மானித்துள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை அளிப்பது சம்பந்தமாக மந்திரி சபைக்கு துரிதமாக ஆலோசனை கூற பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தலைமையில் 6 மந்திரிகள் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

உப குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் சிபார்சுகள் சம்பந்தமாக துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. பீலிக்ஸ் தலைமையிலான மந்திரி சபையின் உப கமிட்டி அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்க உரிமை அளிப்பது சம்பந்தமாகவும் தொழிற்சங்க சட்டத்தில் திருத்தம் செய்வது குறித்தும் ஆராய்ந்தது.

மெட்ரிக் முறைக்கு துரிதமாக மாறுவது குறித்தும் மந்திரி சபை முடிவு செய்தது.

அரசியலமைப்பு மந்திரி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவினுல் தெரிவிக்கப்பட்ட அரசியல் சட்ட நிருபணசபை சம்பந்தமான யோசனையை மந்திரி சபை அங்கீகரித்தது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்தக் கட்டிடத்தை எழுப்ப சீனு அளிக்கும் உதவியை ஏற்கவும் மந்திரி சபை தீர்மானித்தது.

## அலரிக் இன்று ஓய்வு பெறுகிறார்

பொலீஸ் மா அதிபர் திரு. அலரிக் அபேகுணவர்த்தன இன்று முதல் ஓய்வு பெறுகிறார்.

பொலீஸ் திணைக்களத்தில் 39 வருட காலம் கடமையாற்றிய திரு. அபேகுணவர்த்தன ஆரம்பத்தில் சப் இன்ஸ்பெக்டராகச் சேர்ந்தார். (5)

## கோல்டா மெயர் நிராகரித்தார்

டெல் அவிவ், ஜூன் 29

மத்திய கிழக்கில் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி நாஸர் தெரிவித்த யோசனையை இஸ்ரவேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் நிராகரித்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டியின் பாதுகாப்பில் இருந்தபோது

# 12 வயதுச் சிறுமியை கடத்தி செல்ல முயற்சி

### டாக்சியில் செல்கையில் ஒருவாறு தப்பினாளாம்

பாட்டியின் பாதுகாப்பில் இருந்த பன்னிரண்டு வயதுச் சிறுமியை கடத்திச் சென்றதாக ஒருவர் மீது குற்றம் சாட்டி கொழும்பு மேலதிக நீதவான் திரு. நந்தா பிஜயசேகரா முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூவைச் சேர்ந்த எம். எம். ஜேன் நோனா என்னும் பெண்மணியின் பாதுகாப்பில் இருந்த எச் சிறியலதா என்னும் சிறுமியைக் கடத்திச் சென்றதாக கிராண்ட்பாஸைச் சேர்ந்த ரி. ரூபன் சிங்கோ மீது கிராண்ட்பாஸ் பொலீசார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

சிறியலதா தனது சாட்சியத்தில் கூறியதாவது:- "நான் எனது பாட்டியுடன் வசித்து வந்தேன். எனக்கு எதிரியை அவ்வளவு தெரியாது. ஆனல் ஒரு நாள் என்னைத் தேநீர் குடிக்க வரும்படி அவர் அழைத்தார்.

"சம்பவம் நடைபெற்ற தினம் மாலை நேரம் 5 மணி இருக்கும். நான் எனது வீட்டுக்குப் பின்னல் இருந்த கக்கூசுக்குச் சென்றேன். அப்போது மழை பெய்ததால் எனது பாவாடையால் தலையை மூடிக் கொண்டு சென்றேன்.

"அங்கே மதகுக்குப் பக்கத்தில் நின்றிருந்த எதிரி என்னைக் கூப்பிட்டார். பின் என்னைப் பிடித்து வாய்க்குள் சாரத்தைத் திணித்து ஒரு டாக்ஸியில் தாக்கிப் போட்டுக் கொண்டு சென்றார். என்னைத் தாக்கவும் தொடங்கினர்.

"யார் இந்தச் சிறுமி என்று டாக்சி டிரைவர் கேட்ட போது சிறுவயதில் காணமல் போன தனது குழந்தை என்று கூறினர் எதிரி. ஆனல் நானே மறுத்தேன்.

"அப்போது பொலீஸ் கார் ஒன்று வரவே அவ்விடத்தில் என்னை இறக்கி விட்டு அவர்கள் ஓடிவிட்டார்கள். பொலீசார் என்னைக் கூட்டிச் சென்று கொட்டாஞ்சேனை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். மறு நாள் எனது பாட்டி வந்து என்னைக் கூட்டிச் சென்றார்.

"என்னைக் கடத்திச் சென்ற நபர் பற்றி பாட்டியிடம் நான் விபரித்த போது அது ரூபன்தான் என பாட்டி கூறினர்.

"பின்னர் கிராண்ட்பாஸ் பொலீஸ் நிலையத்துக்குச் சென்று நாங்கள் இதுபற்றி முறையிட்டோம். டாக்சி டிரைவரை எனக்கு முன்பின் தெரியாது" என்றார்.

மேல் விசாரணை ஆகஸ்ட் 3-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

### மடுத்திருப்பதியில் அறுவர் சந்தேகத்தின் பேரில் கைது

மன்னார், ஜூன் 29

மடுத் திருப்பதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்ததாகக் கூறப்படும் ஆறு நபர்கள் பொலீஸாரால் சுற்றி வளைக்கப்பட்டனர். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அறுவரையும் விளக்க மறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் திரு. கே. வி. நவரட்னம் உத்தரவிட்டு இச் சந்தேக பேர்கள் சம்பந்தமான விபரங்களை திரட்டுமாறு பொலிஸாரைப் பணித்துள்ளார்.

தற்சமயம் மடுத் திருப்பதியில் மடுமாதாவின் வருடாந்த (ஆனி ஆடி) உற்சவம் நடைபெற்று வருவது தெரிந்ததே. பல்லாயிரம் பக்தர்கள் பங்கு பற்றும் இவ்விழா ஆடிமாதம் இரண்டாந்திகதி வரை நடைபெறும்.

பிரசித்தி பெற்ற இவ் உற்சவத்தில் பங்கு பற்ற வரும் பக்தர்களிடம் தங்கள் கைவரிசையைக் காட்டி தங்கள் "உழைப்பை" நடத்தும் எண்ணத்துடன் வந்ததாகக் கருதப்படும் இச்சந்தேக நபர்கள், பொலீஸாரின் தீவிர கண் காணிப்பிலிருந்து தப்ப முடியவில்லை. மடுப்பதியில் சந்தேகமான முறையில் நடந்ததை அவதானித்த பொலீஸார் இந்த ஆறுநபர்களையும் உடன் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். பொலிஸாரின் வேண்டுகோளின் படி மனனார் பதில் நீதவான் திரு. கே. வி. நவரட்னம் சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-185)

### அக்கரைப்பற்று பகுதியில் தொடர்ந்தும் பீதி நிலைமை

அக்கரைப்பற்று, ஜூன் 29

பொதுத் தேர்தலுக்குப் பின்பு நிந்தவூர் தொகுதியைச் சேர்ந்த அக்கரைப்பற்றுப் பகுதியில் அமைதியின்மை கடந்த ஒரு மாதங்களாக நீடித்துக் கொண்டே போகிறது என்று பொலீஸ் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அக்கரைப்பற்று பொலீஸாரால் நிலமையைச் சமாளிக்க முடியாத காரணத்தினல் கொழும்பில் இருந்து விசேஷ பொலீஸ் பிரிவு ஒன்று வந்துள்ளது.

இதனல் அக்கரைப்பற்றுப் பகுதியில் பெருந் தொகையான ஏக்கர் இடைப்போக நெற்சாகுபடி செய்யும் நிலங்கள் தரிசு நிலங்களாகவே கிடக்கின்றன என்று விவசாய இலாகாவின் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. கடந்த ஒரு மாதமாக நடைபெற்ற மோதல்களினல் நடைபெற்ற சேதங்கள் பற்றியும் இதுவரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பது பற்றிய விபரங்கள் பற்றியும் உயர்தர பொலீஸ் அதிகாரிகளினல் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவத்தினல் பெருந்தொகையான தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (ம-23)

### டாக்டரிடம் ஜீவனும்சம் கோரும் டாக்டர் மாணவி

களுபோவில ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் ஒருவருக்கு சம்மன்ஸ் கொடுக்க இயலவில்லை என பொலீஸார் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது என வழக்கறிஞர் தெரிவித்தார். அந்த டாக்டருக்கு பிஸ்கால் மூலம் சம்மன்ஸ் அனுப்பும்படியும் அவர் கேட்டுக் கொண்டார்.

டாக்டர் எம். எச். சரத்பிரேம்நாத் பீரிஸ் என்பவடமிருந்து ஜீவனும்சம் கோரி திருமதி மானல் பீரிஸ் என்பவர் தொடர்ந்துள்ள வழக்கு கொழும்பு பிரதம நீதவான் திரு. ஈ. எப். டி. சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

மனுதார் மருத்துவக் கல்லூரி இறுதி வருட மாணவியென்றும் தன்னைத் தானே கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் அவர் இருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எதிர் மனுதாரர் இந்தப் பெண்ணிடமிருந்து விவாகரத்து கோரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜூலை 4-ம் திகதி டாக்டரை நீதிமன்றத்தில் ஆஜராக்க சம்மன்ஸ் பிறப்பித்தார் நீதவான். (ம)

### இ. போ. ச. பஸ் சேவையை திருத்தி அமைக்க திட்டம்

இ. போ. ச. இந்த ஆண்டு முடிவுக்குள் மிகவும் திறமையான பஸ் சேவையை நடாத்தும் என உறுதி அளிக்கப்படுகிறது. மேலும் 1300 பஸ்களை சேவைக்கு விடுவதன் மூலம் இது சாத்தியமாகும் எனக் கருதப்படுகிறது.

இ. போ. ச. வின் வெரஹர தொழிற்சாலையில் முடங்கிக் கிடக்கும் பஸ்களைத் திருத்தி சேவைக்கு விடுவதன் மூலம் பஸ் சேவையை சீர் செய்யலாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

புது பஸ்களை வாங்குவதிலும் பார்க்க பழுதடைந்த பஸ்களைத் திருத்திச் சேவைக்கு விடுவது செலவு சுருக்கமானது என இ. போ. ச. தலைவர் திரு. அனில் முனசிங்க கருதுகிறார்.

தற்போதைய நிலையில் புதிதாக பஸ்களை இறக்குமதி செய்வது அவசியம் அற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

### பொலிஸுக்கு டிமிக்கி கொடுக்க முயன்ற ஆசாமி

மன்னார், ஜூன் 29

மன்னார் சின்னக்கடை வட்டாரத்தில் உள்ள ஒரு வீட்டினுள் புகுந்த திருடன் ஒருவன் அங்கே அறையினுள் தனது பிள்ளைகளுடன் படுத்திருந்த இளம் பெண் அணிந்திருந்த மோதிரத்தைத்திருட முயற்சித்துள்ளான். திடீரென விழித்துக் கொண்ட வீட்டுக்கார பெண்மணி பதட்டம் அடைந்தாலும், கள்வனைப் பிடித்துக் கொண்டார்.

ஆனல், எப்படியோ தன்னை விடுவித்துக் கொண்ட நபர் ஓடத் தொடங்கினன். ஓடும் போது ஏதோ பொருளில் தடக்கி வீழ்ந்துவிட்ட அவனைப் பின் தொடர்ந்து வந்த பெண் நிலத்துடன் அமுக்கிப் பிடித்துக் கொண்டாராம். அதேவேளையில் இவரின் கூக்குரலைக் கேட்டு அங்கு விரைந்து வந்த அயலவர்கள், மேற்படி நபரை தப்ப விடாது பிடித்துக் கொண்டனர். அதி காலை வேளையிலேயே உடனடியாக அவனைப் பொலீஸில் ஒப்படைத்தனர்.

ஆனல் விசாரணைக்காகப் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நபர் தருணம் பார்த்து ஓடித்தப்பி விட்டதாகவும், உடனடியாகத் தேடிச் சென்ற பொலிஸார், இவன் பதுங்கியிருந்த இடத்திலிருந்து மீண்டும் பிடித்து வந்ததாகவும் பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினர். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேக நபரை விளக்க மறியலுக்கு அனுப்புமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ம-185)

### சந்தேக நபர் ஆஜர்

யாழ்ப்பாணம், ஜூன் 29

ஏழு பவுண் சங்கிலி, நாலு பவுண் மோதிரம், ஒரு கைக்கடிகாரம் ஆகியவற்றை தன்னிடம் இருந்து பறித்தார் என பாக்கியநாதன் என்பவருக்கு எதிராக ஆனைக்கோட்டைப் பொலீஸில் ஞானதாஸ் என்பவர் முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து சந்தேக நபரைக் கைது செய்து பொலீசார் யாழ்ப்பாணம் நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அடுத்த மாதம் 5-ம் திகதி சந்தேக நபரை ஆஜர் படுத்தும்படி நீதவான் உத்தரவிட்டார். (ம-220)

### நேரில் அறியச் செய்க

பள்ளிக் கூடங்களில் கல்வி பயிற்றப்படுகின்றதா? ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே நிறைவேற்றுகின்றார்களா? இவற்றையும் இவை போன்ற மற்றும் பள்ளிக்கூடப் பிரச்சினைகளையும் கல்விப் பரிசோதகர்கள் பழைய காலங்களில் நேரடியாகச் சென்று அறிந்து வந்தனர். ஆனல் கடந்த சில காலங்களாக இத்தகைய நேரடிப் பரிசீலனைகளை எவரும் நடத்தியதாக அறியக் கூடவில்லை. பள்ளிக்கூடங்களில் கல்வியின் தரம் குன்றியதற்கு இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. எனவே புதிய கல்வி அமைச்சர் அவர்கள், கல்விப் பரிசோதகர்கள் தங்கள் பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்களுக்குத் திடீர் விஜயங்கள் செய்து நடப்பவற்றைக் கண்டறியுமாறு பணித்தல் வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

தந்தி

### காந்திக்கு கௌரவம்

டேர்பன், ஜூன் 29

தென் ஆபிரிக்காவில் உள்ள நூதனசாலையில் மகாத்மா காந்திக்கு ஒரு நினைவுச் சின்னம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. "ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக பாடுபட்ட காந்தி ஒரு உத்தம புருஷர்" என புகழ்மாலை சூட்டப்பட்டது. (ம)

### உளவு வள்ளம் பிடிபட்டது

சியோல், ஜூன் 29

சுமார் ஆறு தொன் நிறையுடைய வட கொரிய உளவு வள்ளமொன்றைத் தென் கொரியா கைப்பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பல்கலைக்கழக மாணவி நீதிமன்றத்தில் சாட்சி:

# அவர் உயிரைக் காக்க நான் மணம் புரிந்தேன்

## பட்டதாரி மாணவனிடம் விவாகரத்து கோருகிறார்

"தன்னைக் கல்யாணம் செய்ய நான் உடன்படாவிடில் மறுகணமே தற்கொலை செய்யப் போவதாக தென்னக்கோன் பயமுறுத்தினார். இதனால்தான் நான் அவரை மணக்கச் சம்மதித்தேன்" என கண்டி நீதவான் திரு. சி. பி- வாலகம்பாய முன்னிலையில் சாட்சியம் அளித்த பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவி நந்தகுமாரி கூறினார்.

சக பட்டதாரி மாணவரான உடவத்தையைச் சேர்ந்த ஜே. பி- தென்னக்கோனிடம் இருந்து விவாகரத்து பெற்றுத் தருமாறு கோரி கட்டுகாஸ்தோட்டையைச் சேர்ந்த நந்தகுமாரி என்னும் அழகிய 22 வயது மாணவி வழக்குத் தொடர்ந்துள்ளார்.

எதிர்தரப்பு வழக்கறிஞரினால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது நந்தகுமாரி கூறியதாவது:– "தென்னக்கோனை சிறு வயது முதல் கொண்டு எனக்குத் தெரியும். எங்களுக்கிடையில் 1964–ம் ஆண்டு முதல் காதல் தொடர்பு ஏற்பட்டது. எனது பெற்றோர் இதுபற்றி எதுவும் கேட்கவில்லை. எனது அண்ணருக்கு இந்த காதல் விவகாரம் பற்றி தெரியாது.

"பல்கலைக்கழகத்தில் தென்னக்கோன் எனக்கு சிரேஷ்ட மாணவராக இருந்தார். அங்கும் எமது காதல் தொடர்ந்தது."

வழக்கறிஞர்: அவர் உம்மை கச்சேரிக்குக் கூட்டிச் சென்று நிர்ப்பந்தப்படுத்தி திருமணம் செய்தாரா?

சாட்சி: ஆம்,

வழக்கறிஞர்: விசேஷ லைசென்ஸ் பெற்றுத்தானே பதிவுத் திருமணம் நடந்தது?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: கண்டிக் கச்சேரிக்கு எப்படிச் சென்றீர்கள்?

சாட்சி: பல்கலைக் கழகத்தில் இருந்து பேராதனைச் சந்தி வரை சென்று அங்கிருந்து பஸ்ஸில் சென்றோம்.

வழக்கறிஞர்: எல்லாவற்றிற்கும் தயாராகத்தான் சென்றீர்களா?

சாட்சி: அவர் தயாராகத்தான் வந்தார். ஆனால் நான் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டே இருந்தேன்.

வழக்கறிஞர்: அதாவது பதிவுத் திருமணம் செய்யப் போகும் விஷயத்தை அவர் அன்றுதான் தெரிவித்தாரா?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: அப்படியானால் நீர் பல்கலைக் கழகத்திலேயே தங்கி இருந்திருக்கலாமே.

சாட்சி: நான் வராவிட்டால் தற்கொலை செய்யப் போவதாக அவர் பயமுறுத்தினார்.

வழக்கறிஞர்: ஆகவே நீர் அவருக்காக அனுதாபப்பட்டீர்.

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: அவர் உம்மை நிர்ப்பந்தப்படுத்தித்தான் திருமணம் செய்து கொண்டார். அப்படித்தானே?

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: அப்படியானால் இந்தத் திருமணத்தில் உமக்கு விருப்பம் இல்லை என்று திருமணப் பதிவுகாரரிடம் கூறியிருக்கலாம் அல்லவா?

சாட்சி: ஒரு திருமணப் பதிவுகாரர் முன்னிலையில் நான் போனது அதுவே முதல் தடவை.

வழக்கறிஞர்: அதாவது திருமண சம்பிரதாயங்கள் பற்றி முன்னர் உமக்கு எதுவும் தெரியாது!

சாட்சி: ஆம்.

வழக்கறிஞர்: திருமணத்தின் பின்னராவது நீர் இதுபற்றி உமது பெற்றோருக்கு தெரியப்படுத்தவில்லை.

சாட்சி: சிறிது காலத்தின் பின்னர் அவர்களுக்கு அறிவிக்கலாம் என்று நான் எண்ணினேன். திருமணத்தின் முன்னோ அன்றிப் பின்னரோ நான் அவருடன் வெளியே எங்கும் செல்லவில்லை.

வழக்கறிஞர்: அவர் உமக்கு அனுப்பிய கடிதத்தில் உம்மைக் கொலை செய்து விடப் போவதாக எதுவும் குறிப்பிடவில்லை தானே!

சாட்சி: ஆனால் அவர் என் முன்னிலையில் அதைக் கூறினார்.

வழக்கறிஞர்: உமது பெற்றோரின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் நீர் அவருடன் சென்று வாழ்க்கை நடத்தவில்லை என்று நான் கூறுகிறேன்.

சாட்சி: இல்லை, நான் அப்படி நினைக்கவில்லை.

தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார் நீதவான். (ம)

## டெலிபோன் மூலம் காதல் திருமணத்தில் முடிந்தது

சிட்னி, ஜூலை 29

சுமார் 13 ஆயிரம் மைல் தூரத்திலிருந்து டெலிபோன் மூலம் காதலித்த வாலிபனைத் திருமணம் செய்வதற்காக முன்னாள் உலக அழகு ராணி ஆன் சிட்டி, இங்கிலாந்திலிருந்து ஆஸ்திரேலியா வந்து சேர்ந்தார்.

அழகி ஆனின் உள்ளங் கவர்ந்த கள்வன் (ஆஸ்திரேலிய டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் மத்லெனன்) விமான நிலையத்தில் தன் ஆசைக் காதலியை முத்தமாரி பொழிந்து வரவேற்றார்.

அழகி ஆனும் அவள் காதலன் மத்லெனனும் ஏற்கனவே அறிமுகமானவர்கள் தான். ஆனால் அவர்களின் காதல் உரையாடல்கள் ஆஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்திற்கும் இடையில் டெலிபோன் மூலமாகவே நடைபெற்றன.

வழக்கம் போல் ஒரு நாள் ஆனுடன் டெலிபோனில் பேசிய மத்லெனன் "கண்ணே நீ என்னுடைய நாட்டுக்கு வந்து விடேன். நாங்கள் இன்ப வாழ்க்கை நடத்துவோம்" என்றார். அவ்வளவு தான் தனது உற்றார், உறவினர், தாய் நாடு ஆகிய பந்தங்களை உதறித் தள்ளிவிட்டு வந்து விட்டாள், ஆன்.



கடந்த 1964-ம் ஆண்டு உலக அழகு ராணியாக தெரிவு செய்யப்பட்ட அழகி ஆன் இன்று ஒரு நடிகையாவாள். (ம)

## சார்ஜனிடம் கொள்ளை அடிக்க முயன்றவன் கைது

கொழும்பு ரகசியப் பொலீஸ் விசேஷ பிரிவில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவர் கொண்டதெனியாவிலுள்ள தனது குடும்பத்தாரைச் சந்திக்கச் சென்றபோது நள்ளிரவில் நடு வீதியில் ஒரு இனந் தெரியாத நபர் கத்தியைக் காட்டி அவரைப் பயமுறுத்தி கொள்ளையடிக்க முயன்றனும். பின்னர் அந்த நபர், அதே இடத்தில் எட்டு அங்குல நீள கத்தி ஒன்றுடன் கைது செய்யப்பட்டார்.

கத்தியுடன் அந்த நபர் தன் முன்னால் பாய்ந்தது தான் தாமதம். இந்த பொலீஸ் சார்ஜன்ட் சாதுரியமாக அங்கிருந்து எடுத்தார் ஓட்டம். ஓடியவர் உள்ளூர் பொலீஸாரின் உதவியுடன் அங்கு வந்த அந்த ஆசாமியைக் கைது செய்தார். (ம)

## பிச்சைக்காரனிடம் கொள்ளை அடித்த ஆசாமி

பிச்சைக்காரரிடம் கொள்ளை அடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த எச். எல். சங்கதாச என்பவருக்கு ஆறு மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார் கொழும்பு மேலதிக நீதவான் திரு. நந்தா விஜயசேகரா.

கிராண்ட்பாஸைச் சேர்ந்த முகம்மது ஹுஸேன் என்னும் பிச்சைக்காரனிடம் தன் கைவரிசையைக் காட்டியதாக சங்கதாச மீது கிராண்ட்பாஸ் பொலீசார் வழக்குத் தொடர்ந்திருந்தனர்.

சம்பவம் நடைபெற்ற தினம் கிராண்ட்பாஸ் வீதியில் இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் வந்தபோது எதிரி அவ்வழியால் ஓடி வந்ததைக் கண்டனராம். சந்தேகம் கொண்ட பொலீசார் அந்த நபரை அமுக்கிப் பிடித்துக் கொண்டனர். பொலீஸ் நிலையத்துக்கு அந்த நபரைக் கொண்டு சென்ற போது அங்கே ஒரு கடை வாசலில் இருந்த அந்தப் பிச்சைக்காரன் எதிரியைக் காட்டி அவர் தன்னிடம் பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றதாகக் கூறினாராம். மேற்கண்ட தகவல்கள் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டன. எதிரி இதற்கு முன்னர் ஆறு தடவை குற்றப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## பொலீஸ் விடுதிகளிலும் காதல் மன்னன் உண்டா?

தனது சக பொலீஸ் கான்ஸ்டபிள் வீட்டில் இல்லாத நேரம் உள்ளே புகுந்து அவரின் மனைவியுடன் இன்பம் அனுபவிக்க நினைத்த ஒரு கான்ஸ்டபிளின் திட்டம் பாழாகியது.

அம்பலாங்கொடை பொலீஸ் பகுதியைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அன்று வீட்டில் அவருடைய இளம் மனைவி மாத்திரம் தனித்திருந்தார்.

இதை சக கான்ஸ்டபிள் ஒருவர் அறிந்து கொண்டார். இன்பமான இரவை வீணடிக்க அவர் விரும்பவில்லை. மாற்றுச் சாவி ஒன்றைப் போட்டு அந்த வீட்டைத் திறந்து உட்புக எண்ணினார்.

அவ்விதமே அவர் முயன்றபோது சத்தம் கேட்ட அந்த இளம் பெண் திடுக்கிட்டு எழுந்து சத்தமிட்டார். இந்த சத்தத்தைக் கேட்டு அவ்விடம் ஓடிவந்த பொலீஸ் சார்ஜண்ட் தூரத்தே ஒரு ஆடவன் ஓடுவதை மாத்திரம் காணக்கூடியதாக இருந்தது. (ம)


மதுவையும் சூதாட்டத்தையும் கைவிட்டு
37000 பேர் பாவித்துவரும்

**ஸ்ரீராம வாசனைப்புகை**

கண்திருஷ்டி, சொற்தோஷம், கிரகாதிப்பலன் முதலியவற்றை ஒழித்து, குடும்பத்தில் முன்னேற்றம் அளித்து, வியாபாரத்தில் வெற்றி கண்டு, பகைவர் ஒழித்து கடன் கிட்டி உங்களை லட்சாதிபதியாக்க வல்லது.

ஆயிரக்கணக்கான நற்சான்றுப் பத்திரங்கள் இருக்கின்றன. நீங்களும் பாவித்துப் பாருங்கள்.

★ ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25 ★ மூன்று மாத பாவனைக்கு ரூ.7-50. வி. பி. பி- யிலும் அனுப்பப்படும்.

பகைவர்களை அடக்கி, பரீட்சை பந்தயம், வழக்கு, மற்றும் சென்ற இடமெல்லாம் வெற்றியை அடைந்து நினைத்த காரியம் கைகூடுவதற்கு பாவியுங்கள்.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

விலை 15/50 மட்டுமே

★ பெயருக்கு விசேஷமாக மந்திரம் செபித்து பக்குவமாய் தயாரிக்கப்படும் யந்திரத்தின் விலை 22-50. ★ வியாபார ஸ்தலங்களில் வைத்து விளக்கேற்றுவதற்கு உகந்த 6"X5" அளவிலான யந்திரத்தை 27/50 ரூபாவுக்கு செய்து தருவோம். வி. பி. பி. ஏற்றுக்கொள்ளப்படும்.

வேறு எந்தக் காரணத்திற்கும் தவறாத நிவர்த்தி செய்து கொடுக்கப்படும். வசியம் சம்பந்தப்பட்டவை விசேஷமாகக் கவனிக்கப்படும். காதலில் வெற்றிபெற்று, பெற்றோரின் விருப்பத்தை 3 நாட்களில் பெற்றுக்கொடுக்கப்படும். இருவருடைய பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதி பெற்ற

**நீலன் கந்தசாமி,**

லக்சல கட்டிடம், நிட்டம்புவ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பத்தைபூண்டோடு அழித்த நால்வருக்கு தூக்கு

## அப்பீல் நீதிமன்றத்தில் தீர்ப்பு ஊர்ஜிதமானது

தந்தை, தாய், மகள் அடங்கிய ஒரு குடும்பத்தையே பூண்டோடு அழித்த அவிசாவளையைச் சேர்ந்த நான்கு கிராமவாசிகளுக்கு அப்பீல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

கொழும்பு அசைஸ் நீதிமன்றம் ஏற்கனவே மரண தண்டனை விதித்திருந்தது. அந்தத் தீர்ப்பை எதிர்த்து இவர்கள் அப்பீல் செய்திருந்தனர். ஆனாலும் இவர்களின் அப்பீலை ரத்துச் செய்து தூக்குத் தண்டனையை அப்பீல் நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்துள்ளது.

அவிஸ்ஸாவலையைச் சேர்ந்த கே. எச். சியனேரிஸ், பி. எச். சிறிசேன, ஜே. எச். மார்ட்டின், கருப்பையாராசு ஆகிய நால்வரும் கே. டொன் சைமன் பெரேரா, டப்ளியூ. விமலாவதி ஆகியோரைக் கொலை செய்ததாகவும், மாலினியின் மரணத்துக்கு காரணமாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தனர்.

இவர்கள் குற்றவாளிகள் என்று ஜூரிமார் ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

அப்பீல் நீதிமன்றத்தில் நீதியரசர்கள் ஜி. பி. ஏ. சில்வா (தலைவர்) திரு. சிறிமான, திரு. விஜயதிலக ஆகியோர் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. (ம)


## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

### பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள், சகல வகைப்பட்ட பாரிஸ வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம். அண்ட வாதம், இடுப்பு வாதம். குடல் வாதம், நெஞ்சு அல்லது மார அடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு, குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி, சிரங்கு, அல்லது குட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கும், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம். தசை கரைந்து, கணுக்குக்கு கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

### இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல். சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படத்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்.

வி. பி. பி- தபாலில் பெற்றுக் கொள்ளலாம்-

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.


## பேச்சுவார்த்தை

லக்சம் பேர்க், ஜூன் 29

மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கிடையில் பொருளாதார, அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்த பொதுச் சந்தை நாடுகளுடன் பிரிட்டன் பேச்சுவார்த்தை நடத்தும்-

அயர்லாந்து, டென் மார்க், நோர்வே ஆகிய நாடுகள் இந்த பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதைப் பொறுத்தே இதன் வெற்றி தோல்வி அடங்கியுள்ளது- இந்நாடுகளும் பொதுச்சந்தையில் சேர அங்கத்துவம் கோரியுள்ளன-

பிரான்ஸ், மேற்கு ஜெர்மன், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, லக்சம்பேர்க் ஆகிய பொதுச் சந்தை நாட்டுப் பிரதிநிதிகளும் அங்கத்துவம் கோரியிருக்கும் மூன்று நாடுகளின் பிரதிநிதிகளும் பேச்சுவார்த்தைக்காக ஏற்கனவே இங்கு வந்து சேர்ந்துள்ளனர்- (ல)

## வெளிநாடு செல்வதற்கு தடை நீடிக்கப்படும்

இலங்கையர்கள் வெளிநாடு செல்வதற்கான தடை இன்னும் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்படுமென அரசாங்க வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றன-

சுகாதார, கல்வி காரணங்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு இலங்கையர்கள் வெளிநாடு செல்வதை தடை செய்யும்படி வெளிநாட்டு திணைக்களத்திற்கு நிதி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

நிதி அமைச்சரின் இந்த புதிய நடவடிக்கையின் பயனாக தற்போது இலங்கையர்கள் வெளிநாடு செல்வது ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கையர்கள் வெளிநாடு செல்வதற்கான தடை அரசாங்கத்தினால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும், கடந்த மூன்று வாரங்களில் மிகக் குறைந்த தொகையினருக்கே வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம)

## அட்டோர்னி ஜெனரல்

நீதியரசர் வி. தென்னக்கோன் புதிய அட்டோர்னி ஜெனரலாக நியமிக்கப்பட்டு உள்ளார். நாளை முதலாம் திகதி முதல் அவர் புதிய அட்டோர்னி ஜெனரலாக கடமையாற்றுவார். (ம)

## மட்டுநகர் செ‌ன். மைக்கல் நிர்வாகத்துக்கு பாராட்டு

மட்டக்களப்பு, ஜூன் 29

மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரியை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதென மேற்படி கல்லூரி நிர்வாகிகள் தீர்மானித்திருப்பதைப் பாராட்டி மட்டக்களப்பு மாநகரசபையில் நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது-

திரு. ஜே. எல். திஸ்ஸவீரசிங்கம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் 6-ம் வட்டார உறுப்பினர் திரு. எம். சங்கரதாஸ் பேசுகையில், கடந்த காலத்தில் சென். மைக்கல் கல்லூரி தனியார் பாடசாலையாக இயங்கிய போதிலும் மட்டக்களப்பு மக்களுக்கு செய்த சேவைகள் அளப்பரியதெனத் தெரிவித்தார்.

அரசாங்கம் பொறுப்பேற்றாலும் இந்த கல்லூரிக்கு யேசு சபை குருவானவர் ஒருவரையே அதிபராக நியமிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ம)

## செனட்டர்மீதான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்தாட்சிப்படுத்தப்பட்ட நியமனப் பத்திரத்தின் பிரதியும் நியமனப் பத்திரத்தின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட உண்மையான பிரதியும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்டன.

திரு. அமிர்தலிங்கம் தமது வாதத்தில் கூறியதாவது:-

"இரண்டு நியமனப் பத்திரங்களில் சமாதான நீதவானின் உத்தியோக முத்திரையும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கையெழுத்தும் இருக்கின்றன. அதை மனுதார் பார்க்கவில்லை."

ஆனால் தாம் நியமனப் பத்திரத்தைப் பார்வையிட்டதாகவும் கையெழுத்து இல்லாததால் ஆட்சேபனை தெரிவித்ததாகவும் திரு. சுந்தரலிங்கம் கூறினர்.

இதன் பின் வழக்கு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## 50 ஆயிரம் பேருக்கு வேலை வழங்கத் திட்டம்

வேலையற்ற 50 ஆயிரம் வாலிபர்களுக்கு வேலை வழங்க அரசாங்கம் துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. இவற்றில் 55 வயதில் கட்டாய ஓய்வு பெறுபவர்களினால் 35 ஆயிரம் இடங்கள் காலியாகின்றதென்று தெரிய வருகிறது.

இதனால் அரசாங்க காரியாலயங்கள், கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் நடை முறைகள் மாற்றி அமைக்கப்படும் எனத் தெரிகிறது.

அரசாங்க சேவை, உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்க ஆகியோரால் இந்த அமைப்பு முறைகள் தயாரிக்கப்படும். (ம)

## கூப்பனுக்கு மட்டுமே இனி சலுசல ஜவுளி

எதிர் காலத்தில் ஜவுளிக் கூப்பன்களை ஒப்படைப்பவர்களுக்கு மாத்திரமே இறக்குமதி ஜவுளிகளை வழங்குவதென லங்கா சலுசலா ஸ்தாபனத்தின் புதிய நிர்வாகம் தீர்மானித்துள்ளது. (ம)

## குதிரையிலிருந்து வீழ்ந்த எடின்பரோ கோமகன்

வின்ட்சர், ஜூன் 29

வின்ட்சர் பூங்காவில் போலோ விளையாட்டில் ஈடுபட்டிருந்த மகாராணியின் கணவர் எடின்பரோ கோமகன் குதிரையிலிருந்து கீழே வீழ்ந்து விட்டார். அவருக்கு எலும்பு முறிவு ஏதாவது ஏற்பட்டதா என அறிய எக்ஸ்ரே எடுக்கப்பட்டது.

அவருக்கு பலத்த காயம் எதுவும் ஏற்படவில்லை என்பதை எக்ஸ்ரே படங்கள் வெளியாக்கின. ஆனால் தென்மேற்கு இங்கிலாந்துக்கான சுற்றுப் பயணத்தை கோமகன் ரத்துச் செய்துள்ளார்.

ஏற்கனவே போலோ விளையாட்டில் ஒரு முறை ஈடுபட்ட போது கோமகனுக்கு கை மணிக்கட்டில் முறிவு ஏற்பட்டது தெரிந்ததே- (ம)

இப்பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5 குணசேன மாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை). வெளியிட்ட திகதி 30 ஜூன் 1970-
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org